பக்கங்கள்:10
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 30 ஞாயிற்றுக்கிழமை 13.06.2021 கதிர் 86

## 24 மணிநேரத்துக்குள் 1,353 பேர் சிக்கினர்!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,353 பேர் கடந்த 24 மணிநேரத்துக்குள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைக்கு வந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 31 ஆயிரத்து 395 பேர் அந்தச் சட்டத்தைமீறிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

## மேலும் இரு வாரங்களுக்கு பயணத் தடையை நீடிக்குக!

### அரசிடம் வைத்தியர் சங்கம் வேண்டுகோள்

நாட்டில் மேலும் இரு வாரங்களுக்கு பயணக் கட்டுப்பாட்டை நீடிக்குமாறு இலங்கை வைத்தியர் சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் பயணக் கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில், 2 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றமையையும் இலங்கை வைத்தியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே வைத்தியர் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

☞2

### 200 கோடி ரூபா பெறுமதியான

## 219 கிலோ ஹெரோயினுடன் கடலில் சிக்கியது சிறிய படகு



தெற்குக் கடல் பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சிறிய மீன்பிடிப் படகொன்றில் இருந்து 219 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

☞2

# கூட்டமைப்புக்குள் பிரச்சினை: ஆனால் வெளியேறாது ரெலோ

### அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வெளியில் வந்து செயற்படுவதற்கான நிலை தற்போது வரை இல்லை. கூட்டமைப்புக்குள் சில பிரச்சினைகள் உள்ளன. அதனை நிவர்த்தி செய்து கொண்டு கூட்டுக்குள் இருந்து கொண்டு செயற்படுவோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

☞2

### பயணக் கட்டுப்பாட்டை மீறிய குற்றச்சாட்டில்

## யாழ்ப்பாணத்தில் இன்று மீன் வியாபாரிகள் கைது!

(இ.கலையமுதன்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில், குளப்பிட்டி சந்திக்கு அருகில் மீன் வியாபாரிகள் 6 பேர், யாழ்ப்பாணம் பொலிஸரால் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்போதைய பயணக் கட்டுப்பாட்டு காலத்தில் நடமாடும் வியாபாரத்துக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில், தேவையற்ற வகையில் மக்களை ஒன்றுதிரட்டி மீன்

☞2

## அரசின் முடிவையே அறிவித்தேன்; பதவி விலகவேண்டியது சாகரவே!

### அமைச்சர் கம்மன்பில பதிலடி



எரிபொருள் விலை அதிகரிப்பானது அரசின் முடிவாகும். அது என்னால் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவு கிடையாது. அரசின் அறிவிப்பையே நான் அறிவித்தேன்.

- இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சில் இன்று

☞2

## மோசமான ஆட்சியைக் கைவிடாவிட்டால் ராஜபக்ஷஅரசைவீட்டுக்குஅனுப்புவோம்

### யாழில் வைத்து சுமந்திரன் எம்.பி. எச்சரிக்கை

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

ராஜபக்ஷ அரசு, மோசமான ஆட்சி முறைமையைக் கைவிடாவிட்டால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டியிருக்கும்.

-இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

☞2





## அரசின் முடிவையே ............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர் பில் வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவே தீர்மானித் தது. ஜனாதிபதி, பிரதமர், வர்த்தகத்துறை அமைச்சர், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் கூட்டத்தில் பங்கேற்றி ருந்தனர். எனவே, இது என்னால் தன் னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு கிடையாது.

எரிபொருள் விலை உயர்வு தொடர் பான அறிவிப்பை நிதி அமைச்சே வெளி யிடும். எனினும், இது தொடர்பான அறி விப்பை நானே விரும்பி வெளியிட் டேன். பிரதமரின் பிரதிநிதியாக இரா ஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பங்கேற்றிருந்தார். அரச தலைவர் களைப் பாதுகாக்கவே நான் இவ்வாறு செயற்பட்டேன்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கூட்டம் இடம்பெறாம லேயே கட்சியின் செயலாளர் மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளார். அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்தனர். கட்சியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தவிசாளரான அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோருக்குக்கூட இதுபற்றி தெரியாது.

குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை விமர்சித்தே சாகர காரிய- வசம் அறிக்கை விடுத்துள்ளார். இதற்கான அதிகாரத்தை அவருக்கு வழங்கியது யார்? அரசின் தீர்மானத்தை விமர்சித்து அவர் தவறிழைத்துள்ளார்.

எரிபொருள்விலை உயர்வுக்குப் பொறுப் புக்கூற வேண்டியது யார் என்பது தொடர்பில் பகிரங்க விவாதத்துக்குச் சாகரகாரியவசம்வரவேண்டும். அதற்கான சவாலை நான் விடுக்கின்றேன்.

எனவே, நான் பதவி விலக வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி, பிரதமரின் தீர்மானத்தை எதிர்க்கும் அவர்களின் கட்சி செயலாளரான சாகர காரியவசமே பதவி விலக வேண்டும்- என்றார்.

## 219 கிலோ...........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நேற்றிரவு இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

வெலிகம, பொல்வதுமோதர கடல் பகுதியில் நெடுந்தூர மீன்பிடிப் பட கொன்றை சுற்றிவளைத்துக் கடற் படையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போது சமையல் எரிவாயு சிலிண்டர்களை வெட்டி அதனுள் சூட்சு மமான முறையில் மறைத்து வைக்கப்பட் டிருந்த ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட போதைப்பொரு ளின் பெறுமதி 200 கோடி ரூபாவுக்கு அதிகமாகும் என்று கடற்படையினர் கூறி யுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் படகில் இருந்த 6 பேரும், அவர்களுடன் கரையில் இருந்து தொடர்புகளைப் பேணிய 3 பேரும் கைதுசெய்யப்பட்டுள் ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது

## மேலும் இரு .........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 21 ஆம் திகதி நீக்கப்பட்டால், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதி வேகமாக மீண்டும் அதிகரிக்கத் தொடங் கும் என்றும் இலங்கை வைத்தியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் வரை 14 ஆம் திகதிக்குப் (நாளை) பின்னர் மேலும் இரண்டு வாரங்களுக்குப் பயணக்கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் வைத் தியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளின்போது செயற்படும் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற் கொள்வதோடு, தனிமைப்படுத்தப்படு பவர்களின் எண்ணிக்கையையும் அதி கரிக்க வேண்டும். அத்தோடு பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிப்பதன் மூலம் சமூகத்தில் மறைந்துள்ள கொரோனாத் தொற்றாளர்கள் அடையா ளம் காணப்பட வேண்டும் எனவும் இலங்கை வைத்தியர் சங்கம் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே தொற்றுக்குள்ளானவர்க ளுக்கும், தொற்றிலிருந்து குணமடைந்து வருபவர்களுக்கும் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் புதிய தொற்றாளர்களை இனங்காண்பதற் கான வாய்ப்பு குறைக்கப்படுகின்றது என வும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

## மோசமான ஆட்சி.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட் டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். யாழ்ப் பாணத்தில் இன்று நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசானது மக்கள் மீது அடக்குமுறைகளை, வன்முறைகளைப் பிரயோகித்து மக்களை அடக்கி ஆள நினைக்கின்றது. குடும்ப ஆட்சியை நிலைநிறுத்துவதற்குப் பாடுபடுகின்றது.

இந்த அரசு எதிர்காலத்திலாவது சரி யான முறையில் செயற்படாவிட்டால் அரசைவீட்டுக்குஅனுப்பும்செயற்பாட்டில் நாங்கள் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அதற்குரிய நடவடிக்கை களை முன்னெடுப்போம்.

ராஜபக்ஷ அரசானது கடும் போக்கைக் கைவிட்டு அடக்குமுறையை விட்டு குடும்ப ஆட்சி முறைமையையும் கைவிட்டு செயற்பட வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகளினுடைய பங்களிப்போடு அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் அவர் களுடன் சேர்ந்து ஆட்சி நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டும்.

தற்போதுள்ள கொரோனா நிலைமை யைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அர சால் எந்தவிதமான தகுந்த நடவடிக் கையும் முன்னெடுக்கப்படவில்லை. பயணத் தடை என்கின்றார்கள், பயணக் கட்டுப்பாடு என்கின்றார்கள், முடக்கம் என்கின்றார்கள், ஊரடங்கு என்கின்றார் கள். ஆனால், ஒழுங்கான நடைமுறை பின்பற்றப்படவில்லை.

சுகாதார அமைச்சுக்குள்ள அதிகாரத் தைவேறுயாராவதுபாவிக்கின்றார்களா? அல்லதுவேறுஎன்னநடைபெறுகின்றது? ஒன்றுமே எமக்குப் புரியவில்லை.

எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் யாராவது ஒருவர் பொறுப்புக்கூற முன் வர வேண்டும். இல்லையென்றால் அவர்கள் மக்களின் உயிரைக் காப்பாற்று வதற்காகத் தங்களின் பதவிகளைக்கூட இராஜினாமா செய்யலாம் - என்றார்.

## கூட்டமைப்புக்குள்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மன்னாரில் உள்ள அவரது அலுவல கத்தில் இன்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ரெலோ வெளியேறி தனித்துச் செயற்படாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரு வாக்கம் பெறுவதற்கான முயற்சிகளை ரெலோ மேற்கொண்டது.

கூட்டமைப்புக்குள் சில பிரச்சினைகள் உள்ளன. அதனை நிவர்த்தி செய்வதற் கான முயற்சிகளை மேற்கொள்வோம்.

தற்போதைய கால சூழ்நிலையில் நாம் வெளியில் வந்து செயற்படும் நிலை ஏற்படாது.

மக்களை நேசிக்கின்ற கட்சிகளை ஒன்றிணைத்துமக்கள்முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க - நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்கின் றோம். கட்சிகளை ஒன்றிணைத்து குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக் கவுள்ளோம்.

வன்னி மாவட்ட மக்களுக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கு வதற்கான உரிய வழிமுறைகளை அரசு கண்டுகொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்தில் அதிகளவில் கொரோனாத் தொற்றாளர்கள் உள்ளனர். அங்கே தடுப்பூசிகள் போடப்பட வேண்டும்.

அதேவேளை, வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவிலும் கிராமங்கள் முடக்கப் பட்டுள்ளன. குறிப்பாக ஆடைத் தொழிற் சாலையால் பல பிரச்சினைகள் ஏற்பட் டுள்ளன. ஆடைத் தொழிற்சாலை தொடர்ந்தும் இயங்கிக்கொண்டிருக் கின்றது. ஆடைத்தொழிற்சாலையாலேயே கொரோனாத் தொற்று பரவிக் கொண்டி ருக்கின்றது.

ஆடைத்தொழிற்சாலையில் கடமை யாற்றுகின்றவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை அரச செலவில் மேற்கொள் ளப்படுகின்றது என அறிகின்றோம். அவ் வாறு செய்யாமல் அரசால் மேற்கொள் ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை சமூகத் திலும், மக்கள் மத்தியிலும் முழுமை யாகச் சென்றடைய வேண்டும்.

ஆடைத்தொழிற்சாலைப் பணியாளர் கள் தனிப்பட்ட முறையில் பி.சி.ஆர். பரி சோதனைகளை முன்னெடுக்க வேண் டும் - என்றார்.

## யாழ்ப்பாணத்தில்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வியாபாரம் செய்தனர் என்ற குற்றச் சாட்டில் பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் வியாபாரத்துக் கென வைத்திருந்த மீன்கள் மற்றும் அது சம்பந்தமான வியாபாரப் பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபையால் ஏற் கனவே மக்கள் ஒன்றுகூடும் வகையில் வியாபாரம் செய்ய வேண்டாமென எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், தொடர்ச்சியாக குறித்த பகுதியில் வியா பாரம் மேற்கொண்டமையினாலேயே இன்று குறித்த மீன் வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

Education Page

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com

076 443 8622

**நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் - 09இற்கான விஞ்ஞானப் பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப் பட்டுள்ளது.**



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குடும்ப குடும்பிப் பிடிச் சண்டை!

சுமார் இரண்டு ஆண்டுகளின் பின்னர் திடீரென மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலை உயர்வு அறிவிப்பு பல அதிருப்தி அலைகளை– அரசியல் குழப்பங்களை – பொருளாதார நெருக்கடிகளை – உருவாக்கி நிற்பது கண்கூடு.

எரிபொருள் விலை மாற்றத்தைக் கையாள்வதற்கு ஒரு விசேட அமைச்சரவை உபகுழு உண்டு. அதில் ஆராயப்பட்ட பின்னரே இந்த முடிவை அரசு எடுத்தது. மக்களைப் பொறுத்தவரை எரிபொருள் விலை அதிகரிப்பு என்பது ஒட்டுமொத்த அரசின் தீர்மானம்தான். ஆனால் அதனை ஏதோ தனி மனித முடிவு – தீர்மானம் –என்று காட்டி முழுப்பிழையையும் தவறையும் அவர் மீது சுமத்தி தப்ப முயலுகின்றனவோ அரசின் உயர் தரப்புகள் என்று சந்தேகம் எழுவதற்கு இடமுண்டு. ஆனால் விடயம் அதுவல்ல.

நாட்டில் இருப்பது மக்கள் ஆட்சி அல்ல. குடும்ப ஆட்சிப் பீடம்தான். ராஜபக்ஷாக்களின் குடும்பத் தர்பார்தான் நடக்கின்றது. அந்த உள்வீட்டுப் பிரச்சினைதான் இதிலும் வெளிப்பட்டுள்ளது. அவ்வளவே.

பெற்றோலிய எரிபொருள் விவகாரம், சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பிலவின் கீழ் வருகிறது. அவர் மொட்டுக் கட்சி கூட்டணியில் பிவித்துரு ஹெலஉறுமய கட்சியின் தலைவராக உள்ளார். அந்தக் கூட்டணியில் மொட்டுக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக சத்தமின்றி கலகம் – புரட்சி – நடத்த முயலும் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவின் குழுவைச் சேர்ந்தவர் கம்மன்பில்ல.

எரிபொருள் விலை உயர்வு விவகாரத்தை முன்வைத்து உதய கம்மன்பில்லவின் காலை வார முயலுகின்றது பஸில் அணி. சந்தர்ப்பம் பார்த்து காலை வாரும் வேலை இது. எரிபொருள் விலை உயர்வுக்கு உதய கம்மன்பில்லவின் தலையை உருட்ட வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டிருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், நேரடியாக பஸில் ராஜபக்ஷவின் கையாள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியே வந்து பொதுஜன பெரமுனவை – மொட்டுக்கட்சியை – ராஜபக்ஷக்கள் உருவாக்கிய போது, அன்றைய அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அந்தப் பணி பஸில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. தேசிய அமைப்பாளரான பஸிலின் தெரிவே சாகர காரியவசம் என்றும் கூறப்படுகின்றது.

அவர், காலம் பார்த்து உதய கம்மன்பில்லவுக்குத் தடுக்குப்போட இந்த அறிக்கையை – அறிவிப்பை – வெளியிட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

ஆக, இது அரசுக்குள் பிரச்சினை என்பதையும் பார்க்க, குடும்பத்துக்குள் பிரச்சினை என்றே கூறவேண்டும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அமைச்சரவை உபகுழு இந்த எரிபொருள் விலையேற்றம் குறித்து விரிவாக ஆராய்ந்திருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிதி அமைச்சர் என்ற முறையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் டலஸ் அழகப்பெரும, நாமல் ராஜபக்ஷ, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் உதய கம்மன்பில்ல ஆகியோர் இருந்திருக்கின்றனர். அங்கேயே விலை அதிகரிப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆக, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் முடிவை அறிவிக்கும் பணி, அந்த அமைச்சரவை உபகுழுவினால் உதய கம்மன்பில்லவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அதை அவர் செய்திருக்கின்றார். அவ்வளவுதான்.

இந்த விவகாரங்கள் நடக்கும்போது பஸில் ராஜபக்ஷ நாட்டில் இல்லை. விலை உயர்வு பற்றிய அறிவிப்பு வந்ததும் தம்பாட்டில் அறிக்கை அறிவிப்பு என்ற வாளைக் கையிலெடுத்துச் சுழற்றியிருக்கின்றார் பொதுஜன பெரமுனவின் செயலாளரும், அக்கட்சி தலைமையிலான ஆளும் கட்சிக் கூட்டணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான காரியவாசம்.

“எரிபொருள் விலை அதிகரிப்பு முடிவு என்னுடையதல்ல. அது தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் தீர்மானம்” என்பதை அமைச்சர் கம்மன்பில்ல இன்று கொழும்பில் ஊடக மாநாடு கூட்டி அறிவித்து நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து எரிவாயு விநியோகஸ்தர்களும் எரிவாயு விலையை அதிகரிக்க அனுமதிக்குமாறு கோரியிருக்கின்றார்கள்.

இந்த விடயத்தைக் கையாள அமைச்சர்கள் பந்துல குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, மஹிந்த அமரவீர, உதய கம்மன்பில்ல, ஹெகலிய ரம்புக்வெல ஆகியோரைக் கொண்ட அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. சிலிண்டர் ஒன்றின் விலையை எழுநூறு ரூபாவால் அதிகரிக்க அவை கேட்டுள்ளன. ஆனால் சிலிண்டர் ஒன்றுக்கு முந்நூறு ரூபா வரையான அதிகரிப்புக்கு அமைச்சரவை உபகுழு இணங்கும் என்று கருதப்படுகின்றது.

அந்த முடிவையும் அமைச்சர் ஒருவர் அறிவித்ததும் அவரையும் பதவி விலகுமாறு ஆளும் தரப்பில் இருந்து இன்னொரு காரியவசம் ரகப் பிரமுகர் அழைப்பு விடுப்பாரோ என்னவோ....?

இது, அரசுக்குள் உள்ள பிரச்சினையோ, தனிமனித நெருக்கடியோ அல்ல. இது அரசு குடும்பத்தின்– ‘ராஜபக்ஷ அண்ட கோ’ நிறுவனத்தின் உள்வீட்டு சண்டை, சச்சரவின் பிரதிபலிப்பு. அவ்வளவுதான்.

## குறைந்தபட்ச ஊழியர்களைப் பணிக்கு அமர்த்தல் அரச நிறுவனங்களில் தொடர்ந்தும் நடைமுறையில்

### பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலர் அறிவிப்பு



அரச நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச ஊழியர்களை பணிக்கு அழைக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலத்தில் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலும் இந்த நிலைமை தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய எதிர் வரும் காலங் களிலும் அத்தியாவசிய சேவை மாத்திரம் நடத்தி செல்லப்படும். சுகாதார பிரிவால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய எதிர் வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு மேல் பயணத்தடை உள்ள போதிலும் கொவிட் தொற்றாளர்கள் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இதனால் எதிர்வரும் இரண்டு வாரங்கள் தொடர்ந்து வீட்டில் இருந்து பணியாற்ற வேண்டிய நிலைமை ஏற்படலாம் என அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களை எதிர்காலத்தில் பணிக்கும் அழைக்குமாறும், கட்டாயம் சுகாதாரப் பிரிவின் பரிந்துரைகள் கிடைக்கும் வரை அனைத்து ஊழியர்களையும் பணிக்கு அழைக்க வேண்டாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் கர்ப்பிணிப் பெண்கள் தொடர்ந்து வீட்டில் இருந்து பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள்களின் விலை அதிகரிப்பு மக்களுக்கு அரசு கொடுத்த பேரடி

### மக்கள் விடுதலை முன்னணி சாடல்



கொரோனாத் தொற்றால் நாடு பாதிக்கப்பட்டுள்ள நேரத்தில் எரிபொருள் விலையை அதிகரிக்க எடுக்கப்பட்ட முடிவு மக்களுக்கு பேரடியாகும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. நேற்று (சனிக்கிழமை) கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி இவ்வாறு கூறினார்.

எரிபொருள் விலையை அதிகரிக்க எடுக்கப்பட்ட முடிவு எதிர்காலத்தில் அனைத்து துறைகளிலும் விலைகள் அதிகரிக்க வழி வகுக்கும் எனக் கூறினார். சமீப காலங்களில் அறிமுகப் படுத்தப்பட்ட எரிபொருள் விலை உறுதிப் படுத்தல் நிதியத்தின் விவரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஏற்கனவே தொற்று மற்றும் வருமான இழப்பால் பாதிக் கப்பட்டுள்ள மக்களை மேலும் சுமையை ஏற்படுத்தாமல் அதிகரித்த எரிபொருள் விலையை திரும்பப் பெறுமாறு அரசாங்கத்தை சுனில் ஹந்துநெத்தி வலியுறுத்தினார்.

## எரிபொருள்கள் விலை அதிகரிப்பு தொடர்பில் விளக்கமளிக்கப்படும்

### அமைச்சு அறிவிப்பு

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பாக விளக்கமளிக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ள எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, இன்றைய தினம் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து அதற்கான பதிலை வழங்குவேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்கள் அசௌகரியத்துக்கு முகங்கொடுத்துள்ள காலப்பகுதியில் எரிபொருள்களின் விலையை அதிகரித்தமைக்கான பொறுப்பை ஏற்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலக வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரியுள்ளது.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இதற்கு நேரடி பொறுப்புக்கூற வேண்டும் எனவும் இவ்வாறான நிலைமையை ஏற்படுத்தியமைக்கான முழுமையான பொறுப்பை ஏற்றுக்கொண்டு பதவி விலக வேண்டும் எனவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறப்பு இராணுவ புலனாய்வு குழுக்கள் நாடு முழுவதும்!

### இராணுவத் தளபதி அதிரடி நடவடிக்கை

தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறி பயணிக்கும் நபர்களின் தகவல்களைத் தேடுவதற்காக நாடு முழுவதும் சிறப்பு இராணுவ புலனாய்வு குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார். இதன்படி, தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்கள் மீறப்படும் இடங்கள் தொடர்பாகப் பொலிஸ் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியது இந்தக் குழுக்களின் பொறுப்பு என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, பயணக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்ட காலகட்டத்தில் பலரின் நடத்தை திருப்திகரமாக இருக்கின்றன எனவும், எனினும், சிலரின் நடத்தை வருந்தத்தக்கதாக காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில், அத்தியாவசிய தேவைகளைத் தவிர வேறு எந்த காரணத்துக்காகவும் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று அவர் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் நாட்டை மீண்டும் திறக்கும் முடிவு மக்களின் செயற்பாடுகளால் மாற்றப்பட்டது எனவும், மக்கள் சரியான முறையில் செயற்பட்டால், நாட்டை உரிய திகதியில் திறக்க முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.



# ஜெப் பெசோசுடன் விண்வெளி பயணம்

## 205 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்த நபர்

அமேசான் நிறுவனர் ஜெப் பெசோசுடன் விண்கலத்தில் விண்வெளிக்குச் செல்லும் வாய்ப்பை 205 கோடி ரூபாய்க்கு ஒருவர் ஏலத்தில் எடுத்துள்ளார்.

ஜெப் பெசோசின் ராக்கெட் நிறுவனமான புளூ ஆரிஜின், நியூ செப்பர்டு என்கிற விண்கலத்தை ஜூலை 20ஆம் நாள் விண்ணில் செலுத்துகிறது.

இதில் ஜெப் பெசோஸ், அவர் தம்பி மார்க் ஆகியோர் விண்வெளிக்குச் செல்ல இருக்கின்றனர். நியூ செப்பர்டு விண்கலத்தில் மொத்தம் 6 பேர் செல்ல முடியும் என்பதால், மற்ற இருக்கைகளில் செல்லும் வாய்ப்பை ஏலத்தில் விற்க முடிவு செய்தனர்.

இதன்படி மூன்றாவது இருக்கையில் செல்லும் வாய்ப்புக்கான ஏலத்தில் 159 நாடுகளைச் சேர்ந்த ஏழாயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதிக அளவாக 205 கோடி ரூபாவுக்கு ஒருவர் ஏலம் எடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ள புளூ ஆரிஜின் நிறுவனம் அவர் பெயரை வெளியிடவில்லை.

### கொரோனா பாதிப்பு அதிகரிப்பு காரணமாக

# ஊரடங்கை நீடிக்க இங்கிலாந்து பரிசீலனை



இந்தியாவில் முதன் முதலில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாடு, தற்போது ஐரோப்பா முழுவதும் வேகமாகப் பரவி வருகிறது. குறிப்பாக இங்கிலாந்தில் இந்த புதிய வகை கொரோனா வைரஸின் பாதிப்பு அதிகமாக உள்ளது.

இங்கிலாந்தில் நேற்று ஒரே நாளில் 8,125 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இது பெப்ரவரி மாதத்துக்கு பின் அங்கு பதிவான அதிகபட்ச தினசரி பாதிப்பாகும். இந்த புதிய பாதிப்புகளில் 90 சதவீதம் டெல்டா மாறுபாடு வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இங்கிலாந்து சுகாதாரத் துறை அமைச்சகம் கூறுகிறது.

இதனிடையே இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு கட்டுப்பாடுகள் வருகிற 21ஆம் திகதி முடிவுக்கு வரும் என பிரதமர் போரிஸ் ஜான்சன் ஏற்கனவே அறிவித்துள்ளார். ஆனால் டெல்டா மாறுபாடு வைரஸ் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஊரடங்கு கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதை தாமதப்படுத்த வேண்டும் என சுகாதார நிபுணர்கள் அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இந்தநிலையில் ஊரடங்கு கட்டுப்பாடுகளை மேலும் 4 வாரங்களுக்கு நீடிக்க இங்கிலாந்து அரசு பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# வாளால் கேக் வெட்டிய இங்கிலாந்து ராணி எலிசபெத்

ஜி7 கூட்டமைப்பின் 47ஆவது உச்சி மாநாடு, பிரிட்டனின் கார்ன்வால் நகரில் நடைபெற்றுவருகிறது. இந்த நிகழ்வில் இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசபெத்தும் கலந்து கொண்டார். அவருடன் இளவரசர் சார்ல்ஸ், அவரது மனைவி கெமில்லா மற்றும் பேரன் வில்லியம் ஆகியோரும் கலந்து கொண்டனர். ராணி எலிசபெத்தின் கணவர் பிலிப் அண்மையில் காலமானார். அவரது மறைவுக்குப் பிறகு, குடும்பத்துடன் இங்கிலாந்து ராணி கலந்து கொள்ளும் முதல் நிகழ்வு இதுவாகும்.

இந்த நிகழ்வின் போது, ஜி 7 கூட்டமைப்பின் தலைவர்கள், ராணியுடன் இணைந்து படம் எடுத்துக் கொண்டனர். படம் எடுக்கையில், ராணி 2ஆம் எலிசபெத் நகைச்சுவையாகப் பேசி, அனைத் துத் தலைவர்களையும் சிரிக்க வைத்து மகிழ்ந்தார்.

மாநாட்டிற்கிடையில், ராணி 2ஆம் எலிசபெத் கேக் வெட்டும் நிகழ்வும் நடைபெற்றது. அதில் சிறப்பம்சமாக ராணி வாள் கொண்டு கேக் வெட்டியது அனைவரையும் சந்தோஷத்தில் ஆழ்த்தியது. ராணி வாளால் கேக் வெட்டும் படம் இணையத்தில் வெளியாகி உள்ளது.

ராணி கேக் வெட்டிய நிகழ்வானது, அவரது பிறந்த நாளை நினைவுபடுத்தியது. அவரது உண்மையான பிறந்த நாள் ஏப்ரல் 21 ஆகும்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அவரது கணவர் இளவரசர் பிலிப் மறைந்தமையால், ராணியின் பிறந்தநாள் விமரிசையாக கொண்டாடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா எதிரொலி மாஸ்கோவில் ஊரடங்கு

## ஒரு வாரம் தொடந்து அமுலில்



கொரோனா பரவல் அதிகரிப்பு காராணமாக ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் ஒரு வாரத்திற்கு ஊரடங்கை மாகாண ஆளுநர் Sergei Sobyanin அமுல்படுத்தி உள்ளார்.

ரஷ்யாவில் கடந்த ஒரு நாளில் 13 ஆயிரத்து 510 பேருக்கும், அதிகபட்சமாக மாஸ்கோவில், 6 ஆயிரத்து 701 பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது. கடந்த பெப்ரவரி மாதத்திற்கு பின் அங்கு மீண்டும் பரவல் புது உச்சம் தொட்டதை அடுத்து ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு உள்ளது.

ஊரடங்கு காலத்தில் பார்கள், உணவகங்கள் என அனைத்தும் மூட உத்தரவிடப்பட்டு உள்ளது. மேலும் மூத்த குடிமக்கள் வீட்டை விட்டு வெளியே வராமல் இருக்கவும், அதி விரைவாக மக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ஊரடங்கு காரணமாக யூரோ கால்பந்து போட்டிகளில் ரசிகர்களை அனுமதிப்பதா என்ற சர்ச்சைகள் எழுந்துள்ளன.



## தமிழகத்தில் கொரோனா பாதிப்பு குறைவாக உள்ள 27 மாவட்டங்களில்

# டாஸ்மாக், தேநீர்க் கடைகள் திறப்பதற்கு அனுமதி

தமிழகத்தில் ஊரடங்கிற்குப் பின்னர் கொரோனாப் பாதிப்பு படிப்படியாகக் குறைந் வரும் நிலையில் பாதிப்பு குறைவான மாவட்டங்களுக்கு மட்டும் ஊரடங்கில் தளர்வுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நாளையிலிருந்து பாதிப்பு குறைவான சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் மட்டும் கட்டுப்பாடுகளுடன் டாஸ்மாக் கடைகளைத் திறக்க அனுமதி அளிக்கப்பட்டது. இதனால் தேநீர்க் கடைகளுக்கும் அனுமதி அளிக்கவேண்டும் என்ற வலுவான கோரிக்கை எழுந்ததையடுத்து தற்போது தேநீர்க் கடைகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காலை 6 மணிமுதல் மாலை 5 மணிவரை தேநீர்க் கடைகளில் பொதிகளில் வழங்கும் சேவைக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இனிப்பு, கார வகைகள் விற்கும் கடைகளும் காலை 6 மணிமுதல் மதியம் 2 மணிவரை பொதி செய்து கொடுக்கும் பணிக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நெகிழிப் பைகளில் தேநீர் பெறுவதைத் தவிர்க்குமாறும், கடைகளின் அருகே நின்று மக்கள் தேநீர் அருந்த அனுமதி இல்லை எனவும் அரசு வலியுறுத்தியுள்ளது. மேலும், தேநீர்க் கடைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும் எனவும் அரசாங்க அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கோழையை போல் செயல்படுகிறார் மோடி

## பிரியங்கா காந்தி கடும் குற்றச்சாட்டு



'யார் பொறுப்பு?' என்ற தலைப்பில் காங்கிரஸ்பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி சமூக வலைத்தளங்களில் நேற்று வெளியிட்ட பதிவில் இந்திய அரசைக் கடுமையாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

'பிரதமருக்கு மக்கள் முக்கியமல்ல. அரசியல் தான் முக்கியம். உண்மையைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை. ஆனால், தன்னை விளம்பரம்படுத்துவதே முக்கியம். திறமையான அரசு என்பதன் அர்த்தம், நெருக்கடியின்போது பொறுப் பேற்றுக் கொண்டு, நடவடிக்கை எடுப்பதாகும். ஆனால், பிரதமர் மோடியின் அரசு தொற்றின் ஆரம்பம் முதலே உண்மையை மறைத்து, பொறுப்பைத் தட்டிக்கழித்து வருகிறது.

உலக நாடுகளின் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்தபோது செயல்படாமல் இருந்துவிட்டு, 2021 ஜனவரியில்தான் தடுப்பூசிக்கு பிரதமர் கோரிக்கை விடுக்கிறார். இதனை கோடை காலத்திலேயே செய்திருந்தால் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றி இருக்க முடியும். பிரதமர் ஒரு கோழையைப்போல் செயல்படுகிறார். கொரோனாவுக்கு எதிரான போரில் நிபுணர்கள், விமர்சகர்கள், கூட்டணிக் கட்சி, எதிர்க்கட்சியினரை அச்சமின்றி சேர்த்துக்கொண்டு செயல்படவில்லை' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய அரசின் ஹைட்ரோகாபன் ஏலத்திற்கு கண்டனம் தெரிவித்து விவசாயிகள் போராட்டம்



புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் அருகே ஹைட்ரோகாபன் எடுக்க மத்திய அரசின் ஏலத்திற்கு கண்டனம் தெரிவித்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். நெடுவாசல் அருகேயுள்ள கர்காகுறிச்சி வடதெரு பகுதியில் ஹைட்ரோகாபன் எடுக்க பெற்றோலியத் துறை ஏல அறிவிப்பை கடந்த 10ஆம் திகதி அறிவித்தது. இது அந்தப் பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே கடந்த 2017ஆம் ஆண்டு நெடுவாசல் பகுதியில் ஹைட்ரோகாபன் எடுக்க மத்திய பெற்றோலியத்துறை முயன்ற போது தொடர்ந்து 21 நாள்களும் அதன்பிறகு 200 நாள்களும் தொடர்ச்சியாக நெடுவாசல் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தப் போராட்டத்தின் விளைவாக அந்தத் திட்டமானது தற்காலிகமாக கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதன் பிறகு புதுக்கோட்டை மாவட்டத்தின் பல பகுதிகளில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டங்களில் ஹைட்ரோகாபன் உள்ளிட்ட எந்தவொரு திட்டத்திற்கும் மத்திய அரசு மற்றும் தமிழக அரசு அனுமதி வழங்கக் கூடாது. மேலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தாமல் இருக்க காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக கோரிக்கை வைத்த நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு தமிழக அரசு காவிரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தது.

அந்தப் பகுதியில் எந்தவொரு விவசாயத்தைப் பாழ்படுத்தும் திட்டமும் நிறைவேற்றப்படாது என்று விவசாயிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருந்த நிலையில் தற்போது பெற்றோலியத்துறை மீண்டும் 463 சதுர கிலோ மீற்றருக்கு ஹைட்ரோகாபன் எடுப்பதற்கான ஏல அறிவிப்பை விடுத்துள்ளது. இது அந்தப் பகுதி மக்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்த டெல்டா பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சிவசங்கர் பாபா மீது போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு மாணவிகளை பாலியல் கொடுமை செய்ததாகப் புகார்



சென்னையை அடுத்திருக்கின்ற கேளம்பாக்கம் சுஷீலஹரிபள்ளிநிறுவனர் சிவசங்கர் பாபா மீது போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. 3 தனித்தனிப் புகார்களின் அடிப்படையில் சிவசங்கர் பாபா உள்ளிட்டோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அவரது அறக்கட்டளையின் கீழ் செயற்படும் பாடசாலையில் மாணவிகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கிக் கொடுமைப்படுத்தியமை தொடர்பிலேயே இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

குறைவான கட்டணமென்பதால் வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமான மாணவ, மாணவிகள் இவரது பாடசாலையில் பயின்று வருகின்றனர். பக்தியின் பெயரில் ஏமாற்றி இவர்களைத் தனது இச்சைக்குப் பயன்படுத்தி வந்தார் என பல முன்னாள் மாணவிகள் ஊடகங்களில் புகார் தெரிவித்திருந்தனர். இதனையடுத்தே இவரைப் பற்றிய பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்துள்ளன.

காவல்துறை சார்பில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு சிவசங்கர் பாபாவுக்கு எதிராக ஆதாரங்களைத் திரட்டும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் சிவசங்கர் பாபா மீதான வழக்குகளை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றம் செய்து டி.ஜி.பி. திரிபாதி உத்தரவிட்டுள்ளார். சிவசங்கர் பாபா டேராடூனில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமையால் வேறொரு மாநிலத்திற்கு சென்று விசாரணை நடத்த ஏதுவாக சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் 3 மாவட்டங்களில் கனமழை பெய்வதற்கு வாய்ப்பு

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

அடுத்த 24 மணி நேரத்தில் நீலகிரி, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வுமையம் இன்று வெளியிட்ட வானிலை அறிக்கையில், ''வடக்கு வங்கக்கடல், ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தின் கடற்கரையை ஒட்டி உருவாகியுள்ள காற்றமுத்தத் தாழ்வுப் பகுதி அதே பகுதியில் நீடிக்கிறது. அடுத்த 48 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வுப் பகுதியாக அது வரக்கூடும்.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் அடுத்த 24 மணி நேரத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், எஞ்சிய மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள் மற்றும் ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும். கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்ச மழை அளவாக கோவை சின்னக்கல்லார் பகுதியில் 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## வயல் காவலுக்குச் சென்ற நபர் கரடி தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதி

திருகோணமலை - திரியாய் பகுதியில் வயல் காவலுக்குச் சென்ற நபரொருவர் கரடியின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் இன்று காலை அனுமதிக்கப்பட்டுள்ளார் எனதெரியவருகின்றது.

இவ்வாறு கரடியின் தாக்குதலுக்கு உள்ளானவர் திரியாய்- கட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கே. பிரபாகரன் (48 வயது) எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, திரியாய் பகுதியில் உள்ள வயல் காவலுக்குச் சென்று உறங்கிக் கொண்டிருந்த போது கரடி பாய்ந்து அடித்ததாகவும், இதனையடுத்து காலில் காயம் ஏற்பட்ட நிலையில் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், வைத்தியசாலையின் ஊழியரொருவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர், யானையின் தாக்குதலுக்கு உள்ளான ஒருவரும் தற்போது சிகிச்சைபெற்றுவருவதாகவும் தெரிவித்தார். மேலும் யானையின் தொல்லை மற்றும் கரடியின் தொல்லை அதிகரித்துவருகின்றன எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



## காத்தான்குடி பொலிஸில் மேலும் மூவருக்கு கொரோனா

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களுள் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் இரு சிவில் பாதுகாப்பு படைவீரர்களும் அடங்குகின்றனர்.

இம்மாத ஆரம்பத்தில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 32 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று உறுதியானதையடுத்து, இங்கு கடமையாற்றிய சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுய தனிமைப்படுத்தலில் இருந் தனர். இதனால் பொலிஸ் நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, புதிய காத்தான்குடி பிரதேசத்திலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் காத்தான்குடியிலுள்ள தெரிவு செய்யப்பட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், காத்தான்குடி 6ஆம் குறிச்சி 162 கிராம உத்தியோகத்தர் பிரிவு, 164 பிகிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, காத்தான்குடி மீராபாலிகா மகா வித்தியாலய தேசிய பாடசாலை மண்டபத்தில் இன்று (13) தடுப்பூசி போடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

## வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு 50ஆயிரம் பெறுமதியான கட்டில்கள் வழங்கல்



மட்டக்களப்பு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள உயர் சார்பு சிகிச்சைப் பிரிவிற்கான தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டில்களை இலங்கை பொதுஜன பெரமுன பொறியியலாளர் சங்கத்தின் அனுசரணையில் இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று வழங்கி வைத்தார்.

அமைச்சர் வாழைச்சேனை அதார வைத்தியசாலைக்கு நேரடி விஜயமொன்றினை மேற்கொண்டிருந்த இராஜங்க அமைச்சர் மேற்குறித்த சிகிச்சைப்பிரிவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் புனருத்தாரன நடவடிக்கைகளை பார்வையிட்டமையுடன் வைத்திய சாலையில் நிலவும் ஆளணி பிரச்சினை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தார்.

இங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்று இல்லாத காரணத்தினால் நோயாளர்கள் பாதிப்பிற்குள்ளாவதனால் அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

இதேவேளை சட்ட வைத்தியர் ஒருவர் இவ் வைத்திய சாலையில் இல்லாத நிலையில் பெரும்பாலன பிரேதங்கள் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு உடற் கூற்றாய்விற்காக இடமாற்றம் செய்வதனால் பல்வேறு சிரமங்களை பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என ஊடகவியலாளர் ஒருவர் இதன்போது கருத்தொன்றை அமைச்சரிடம் முன்வைத்திருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் முகமாக நாட்டில் தற்போது சட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை பற்றாக்குறையாகவுள்ளதாகவும் தாம் இவ்விடயம் தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நன்கு அறிந்துள்ளேன் எனவும் இதற்கான தீர்வினைப் பெற்றுதர நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பதில் வழங்கினார்.

தற்போது கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையமும் இவ் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீண்டகால தேவைப்பாடான இச் சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நோயாளர்கள் தங்களுக்கு ஏற்படும் உயர் தேவைப்பாடு உடைய உயர் தர சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## ஏறாவூர் பிரதேசத்தில் ஒரே நாளில் 30இற்கு மேற்பட்ட தொற்றாளர்கள்

ஏறாவூர்ப் பிரதேசத்தில் கொவிட்-19 தாக்கத்தினால் ஏழுபேர் மரணமடைந்தமையுடன் ஒரேநாளில் முப்பதிற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இதையடுத்து ஏறாவூர் நகர பிரதேசத்தின் ஒரு பகுதி முடக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துச்செல்வதையடுத்து பொலிஸ் மற்றும் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் விசேட படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் முடக்கப்பட்ட பகுதியில் வீட்டைவிட்டு வெளியேறுவோரைக் கண்காணிப்பதுடன் வீதிகளில் அவசியமற்றமுறையில் நடமாடும் நபர்களைக் கைது செய்து பி.சி.ஆர். பரிசோதனைக்கு முன்னிலைப்படுத்துகின்றனர்.

இதேவேளை ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருவதாக வைத்தியதிகாரி சாபிறா வசீம் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் நேற்று மாத்திரம் ஒருவர் சாவு; 80 பேருக்கு தொற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று சனிக்கிழமை 80 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நா.மயூரன் தெரிவித்தார். மேலும் ஏறாவூர் சுகாதார பிரிவில் கொரோனா மரணம் ஒன்றும் பதிவாகியுள்ளது நேற்றைய தொற்றாளர் விவரம் - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக வெளியிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு - 1,களுவாஞ்சிகுடி - 2,வாழைச்சேனை - 1,காத்தன்குடி -29 ,ஓட்டமாவடி - 1,கோறளைப்பற்று மத்தி -1,செங்கலடி - 7,ஏறாவூர் - 16,பட்டிப்பளை -4,வவுணதீவு - 1,வெல்லாவெளி - 1,கிராண் - 8-மட்டக்களப்பு வைத்தியசாலை - 01 என தொற்றுக்கள் பதிவாகியுள்ளன .

## நடு ஊற்றுப் பகுதியில் இருவர் கைதாகினர்



கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடு ஊற்றுப் பகுதியில் கேரள கஞ்சா வீட்டில் ஒழித்து வைத்திருந்த இருவரை கிண்ணியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் கிண்ணியா நடு ஊற்றுப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது கிண்ணியா புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரும், கிண்ணியா சூரங்கல் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவருமே கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவர்களிடமிருந்து 135 கிராம் கேரள கஞ்சாவும், தராசு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கிண்ணியா பொலிஸார், திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு






### முதலாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகளை

# அடித்துத் துவைத்தது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மூன்றாவது நாளிலேயே நிறைவுக்கு வந்துள்ளது. இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மே.இ.தீவுகள் அணி 97 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பதிலளித்த தென்னாபிரிக்கா 322 ஓட்டங்களைச் சேர்த்தது. அதிகபட்சமாக குயின்டன் டி கொக் 141 ஓட்டங்களைப் பெற்றார். மார்க்ரம் 60, வன்டெர் டசென் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். மே.இ.தீவுகளின் ஜேஸன் ஹோல்டர் 4, அறிமுகவீரர் ஜேய்டன் சீல்ஸ் 3, கெமர் ரோச் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அதையடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மே.இ.தீவுகள் அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. ரொஸ்டன் சேஸ் 62 ஓட்டங்களை எடுத்திருந்தார். தென்னாபிரிக்காவின் ரபாடா 5 விக்கெட்டுக்களையும், நோர்ட்ஜே 3, கேசவ் மகராஜ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக குயின்டன் டி கொக் தெரிவானார். தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### யூரோ கால்பந்தாட்டத் தொடர்

# சொந்த மண்ணில் ரஷ்யாவை வெளுத்த பெல்ஜியம்



யூரோ கால்பந்தாட்டத் தொடரின் தங்கள் முதல் போட்டியில் ரஷ்ய அணி தங்கள் சொந்த மண்ணில் பெல்ஜியம் அணியிடம் படுதோல்வியடைந்துள்ளது.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பெல்ஜியம் அணியின் நட்சத்திர வீரர் லுகாகு அபாரமாக ஆட, ரஷ்யாவை 3-0 என்ற கோல் கணக்கில் நொறுக்கியது அந்த அணி.

லுகாகு 2 கோல்களை அடிக்க தாமஸ் மியூனியர் இன்னொரு கோலை அடித்தார். பிரிவு பி போட்டியான இதில் பிபா தரப்படுத்தலில் முதல் நிலை அணியாக உள்ள பெல்ஜியம் அணியின் ஆதிக்கம் முழுமையாக வெளிப்பட்டது.

ரெட் டெவில்ஸ் என்று அழைக்கப்படும் பெல்ஜியம் அணி, தான் விளையாடிய அண்மைய 9 போட்டிகளில் தோல்வியடையாமல் யூரோ கோப்பைக்கு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

3-0 என்ற பெல்ஜியம் அணியின் வெற்றி ரஷ்ய ரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்துள்ளது. இந்தப் போட்டியில் அடித்த 2 கோல்கள் மூலம் லுகாகு தனது நாட்டுக்காக 62 கோல்களை அடித்தவரானார். பிரிவு பி-யில் பெல்ஜியம் தற்போது முதலிடம் வகிக்கிறது. பின்லாந்து 2 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

### சக வீரர் மீது மோதி காயமடைந்த

# டு பிளெஸ்சிஸ் மருத்துவமனையில் அனுமதி

பாகிஸ்தான் சூப்பர் லீக் கிரிக்கெட் (பி.எஸ்.எல்.) போட்டிகள் அபுதாபியில் நடந்து வருகின்றன. இதில் இன்று நடைபெற்ற 19 ஆவது லீக் போட்டியில், குவெட்டா கிளாடியேட்டர்ஸ் மற்றும் பெஷாவர் ஜால்மி அணிகள் விளையாடின.

இந்தப் போட்டியின் 7 ஆவது ஓவரில் டேவிட் மில்லர் அடித்த பந்து பவுண்டரியை நோக்கிச் சென்றது. குவெட்டா அணியில் இடம்பெற்ற தென்னாபிரிக்க வீரர் டு பிளெசிஸ் அதனைத் தடுக்க ஓடியபோது, சக வீரரான மொஹமட் ஹஸ்னைனின் காலில் அவரது தலை மோதியுள்ளது. இதில் பலத்த அடிக்குள்ளான டு பிளெசிக்கு அணி மருத்துவர் முதலுதவிச் சிகிச்சை அளித்த பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்குப் பரிசோதனைகள் நடந்து வருகின்றன. பிளெஸ்சிசுக்குப் பதிலாக போட்டியில் அயூப் இணைத் துக்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது.



### பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் 3 நாள்களுக்குள்

# புதிய உலக சாதனையை முறியடித்தார் எத்தியோப்பிய வீராங்கனை

எதியோப்பியாவைச் சேர்ந்த 23 வயதுடைய வீராங்கனை லெட்டெசென்பெட் கிடே பெண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் 3 தினங்களுக்கு முன் படைக்கப்பட்ட புதிய உலக சாதனையை முறியடித்துள்ளார்.

நெதர்லாந்தின் ஹெஞ்சிலோ விளையாட்டரங்கில் நடைபெற்ற எதியோப்பிய வீரர்களுக்கான ஒலிம்பிக் தகுதிகாண் போட்டியில் பங்குகொண்ட அவர், 29 நிமிடங்கள் 01.03 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவுசெய்து இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இதே விளையாட்டரங்கில் நடைபெற்ற மற்றுமொரு தகுதிகாண் போட்டியில் பெண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் முன்னைய உலக சாதனையை நெதர்லாந்து வீராங்கனை சிபான் ஹசன் முறியடித்தார். போட்டியை அவர் 29 நிமிடங்கள் 08.82 செக்கன்களில் நிறைவுசெய்து பெண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டத்தில் புதிய உலக சாதனை படைத்தார்.

இதன்மூலம் ரியோ 2016 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் எதியோப்பிய வீராங்கனை அல்மாஸ் அயானாவினால் நிலைநாட்டப்பட்ட 29 நிமிடங்கள், 17.45 செக்கன்கள் என்ற உலக சாதனையைவிட 10 செக்கன்கள் குறைவான நேரத்தில் 10,000 மீற்றர் போட்டியை சிபான் ஹசன் நிறைவுசெய்தார்.

எனினும், மூன்று நாள்கள் செல்வதற்குள் அந்தச் சாதனையை 5 செக்கன்களால் எதியோப்பியாவின் லெட்டெசென்பெட் கிடே முறியடித்தமை அபாரமான சாதனையாகும்.

இதன் மூலம் 5,000 மீற்றர், 10,000 மீற்றர் ஆகிய இரண்டு ஓட்டங்களுக்குமான உலக சாதனைகளை 1986 இற்கும் 1993 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்படுத்திய நோர்வேயின் இங்றிட் கிறிஸ்டியான் சென்னுக்குப் பின்னர் அந்த இரண்டு போட்டிகளிலும் உலக சாதனைகளை ஏற்படுத்திய முதலாவது பெண் என்ற பெருமையை கிடே பெற்றுக்கொண்டுள்ளார்.




'நான் உலக சாதனை படைக்கவேண்டும் என எதிர்பார்த்தார்கள். 29 நிமிடத்துக்குள்ளாக தூரத்தைக் கடக்க அடுத்ததாக முயற்சி செய்வேன்' என லெட்டெசென்பெட் கிடே தனது சாதனை குறித்துக் கூறியுள்ளார்.

இவர் கடந்த வருடம் 5,000 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்தார். 1993 இற்குப் பிறகு 5,000 மீற்றர் மற்றும் 10,000 மீற்றர் என இருவகை ஓட்டப் போட்டிகளிலும் உலக சாதனை படைத்த வீராங்கனை என்கிற பெருமையை அவர் பெற்றுள்ளார். கடந்த ஒக்டோபர் மாதம் ஸ்பெய்னில் நடைபெற்ற பெண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியை 14 நிமிடங்கள் 06.62 செக்கன்களில் நிறைவுசெய்து லெட்டெசென்பெட் கிடே உலக சாதனை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.


திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.
அருந்ததி
இணைய திருமண சேவை
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
www.arunthathee.com | +94 777 164 524

# அருந்ததி
இணைய திருமண சேவை

+94 777 164 524
www.arunthathee.com

## மணமகன் விபரம்

**17965|ம|1993**
கொழும்பு 09| இந்து
Sri Lanka|172 செ.மீ
Proprietor
புனர்பூசம் (மிதுனம்)

**16766|வே|1992**
இளவாலை|இந்து
Sri Lanka|182செ.மீ
chief Surveyor
திருவோணம் (மகரம்)
செவ்: 07

**16889|வே|1992**
மீசாலை |இந்து
160செ.மீ | Sri Lanka
அவிட்டம் (மகரம்)
Proprietor
செவ் : 08 | கி.பா : 41

**16937| வே |1991**
அல்லாரை இந்து|AU
Staff|178செ.மீ
உத்தரம் (கன்னி)
செவ் : 07

**16739|வே|1991**
கிளிநொச்சி|இந்து
Charted Accountant
Qa|178செ.மீ |அனுஷம் (விருச்சிகம்)
சூ. செவ் : 02

**17357|வி|1991**
யாழ்.நகரம்|இநது
Engineer|Sri Lanka
சதயம் (கும்பம்)
சூ . செவ் : 06|168செ.மீ

**16763| வே|1991**
கரவெட்டி|இந்து
Engineer| Canada
187செ.மீ
திருவோணம் (மகரம்)
செவ்: 08 |கி.பா : 27

**16811|கு|1991**
பருத்தித்துறை |இந்து
Sri Lanka |Sport officer
சூ. செவ் : 09
புனர்பூசம் (கடகம்)
175 செ.மீ

**17974|வே|1991**
சுருவில் |இந்து
Director|சூ. செவ்: 05
புனர்பூசம் (மிதுன்ம்)
175செ.மீ

**16916|வே |1991**
திருநெல்வேலி|இந்து
185செ.மீ |Sri Lanka
Software Engineer
பூசம் (கடகம்) கி.பா : 08

**16982|வே|1990**
மட்டக்களப்பு|இந்து
Sri Lanka |179செ.மீ
Accountant
புனர்பூசம்(கடகம்)

**16925|வே|1990**
மிருசுவில்|இந்து
Junior Technical
Mate|Sri Lanka
பூசம் (கடகம்) |செவ் : 01
172 செ.மீ

**18070|கோ|1989**
கரவெட்டி|இந்து
Canada |Surveyor
மிருகசீரிடம் (ரிஷபம்)
175செ.மீ | சூ. செவ் : 05

**16841|வே|1989**
திருநெல்வெளி|இந்து
Proprietor |Sri Lankan
சதயம்(கும்பம்)
சூ. செவ் : 08 | 168செ.மீ

**18010 |வே|1988**
சுழிபுரம்|இந்து
in charge | UAE
அத்தம் (கன்னி)
201 செ.மீ |செவ் : 08

**17959|வே |1988**
வட்டுக்கோட்டை|இந்து
மிருகசிரிடம் (மிதுனம்)
176 செ.மீ |Self
Employer | UK

**16733 |வே|1987**
அம்பாறை|இந்து
Sri Lanka |Lecturer
168செ.மீ |சூ.செவ் : 03
கார்திகை (ரிஷபம்)

**18016|வே|1986**
கொழும்பு 15|இந்து
168செ.மீ |Sri Lanka
Assistant Manager
ரேவதி(மீனம்) | RC

**18022|ப|1984**
நீர்வேலி |இந்து
Supervisor
AU| 158செ.மீ
பரணி (மேடம்)

**16910|வே|1984**
கொழும்பு 06 |இந்து
Software Engineer
கேட்டை (விருச்சிகம்)
176செ.மீ | Sri Lanka
செவ் : 07| கி.பா : 55

**16907| வே |1983**
கரவெட்டி|இந்து
Canada | 185செ.மீ
Business
விசாகம் (விருச்சிகம்)
செவ் : 04

**16964|வே|1981**
வல்லெட்டி|இந்து
Uk | 172 செ.மீ
System Administrator
சித்திரை (துலாம்)

**16322|வே|1979**
அளவெட்டி|இந்து
Building construction
Netherland
175 செ.மீ
புனர்பூசம் (மிதுனம்)

**16820 |மி| 1976**
கரவெட்டி | இந்து
இலங்கை | செவ் : 01
Development Officer
158 செ. மீ
உத்தரம் (மகரம்)

## மணமகள் விபரம்

**17986|கோ|1998**
வரணி | இந்து
Student | செவ் :2
மூலம் (தனுசு)
157செ.மீ | Sri Lanka

**16231|அ|1996**
கொழும்பு 15 | இந்து
உத்திரட்டாதி (மீனம்)
சூ.செவ் : 07 |165செ.மீ

**15838 |ந |1996**
சுன்னாகநகரம் |இந்து
சதயம் (கும்பம்)
Sri Lanka
165 செ.மீ |செவ் : 02

**16952|வே|1995**
புலோலி |இந்து
திருவோணம் (மகரம்)
Sri Lanka
சூ.செவ் : 12 |168 செ.மீ

**16808|வே |1995**
கோண்டாவில் | இந்து
சூ.செவ் : 12|Sri Lanka
மூலம் (தனுசு)
154செ.மீ | சூ.சே 12

**16862|வே|1994**
உடுப்பிட்டி|இந்து |SL
Management Service
Officer |கி.பா : 64
அஷ்வினி (மேடம்)
160செ.மீ|செவ் : 07

**16955|ந|1994**
கொடிகாமம் | இந்து
Sri Lanka
ரேவதி (மீனம்)
157 செ.மீ | செவ் : 07

**15673 | வே |994**
புத்தூர் | இந்து
Public Relation Officer
Sri Lanka | இந்து
அத்தம் (கன்னி)
158 செ.மீ |சூ.செவ் : 07

**16898|வே|1993**
கோண்டாவி|இந்து
Searching
சுவாதி (துலாம்)
Sri Lanka |161 செ.மீ
சூ. செவ்: 01

**16694|கோ1992**
கோப்பாய் |இந்து
Sri Lanka
Teacher
ஆய்யிலியம் (கடகம்)
154செ.மீ

**16760|வே |1991**
யாழ்.நகரம்|இந்து
Executive in Bank
அத்தம் (கன்னி)
Sri Lanka
164செ.மீ |செவ் : 02

**16748 |கு |1991**
பருத்தித்துறை|இந்து
Sri Lanka |Teacher
157செ.மீ |
செவ்: 12
திருவாதிரை (மிதுனம்)

**16514| கு|1991**
வேலணை|இந்து
Sri Lanka
Development Officer
செவ் : 04 |154 செ.மீ
அஸ்வினி (மேடம்)

**18025| வே|1989**
கொக்குவில்|இந்து
UK |Accounting
பூரம் (சிம்மம்)| 168செ.மீ

**16754| வே|1984**
திருகோணம்|இந்து
Analyst in Bioanalysis
Canada|பூரம் (சிம்மம்)
155 செ.மீ

**18037|மு|1983**
கண்டி |இந்து|Srilanka
Senior Lecturer &
Academic Coordinator
செ.மீ 168
ரோகிணி (ரிஷபம்)

**16970|வே|1983**
திருநெல்வேலி|Srilanka
145செ.மீ
திருவாதிரை (மிதுனம்)
Audit Examiner
Divorced

**17516|வே|1975**
பருத்தித்துறை |இந்து
Sri Lanka|செவ் : 08
Deputy Branch Manager
at Bank |162 செ.மீ
புனர்பூசம் (மிதுனம்)

LOCKDOWN
# வரன் தேடல்

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு (Profile No) இலக்கத்தை Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

பொருத்தமான வரனை WhatsApp, Viber இனூடாக அனுப்புவோம்.

ஜோதிடரிடம் செல்லமுடியவில்லையா? எங்கள் ஜோதிடர் மூலம் ஜாதக பொருத்தம் பார்த்து தருவோம்.

மணமக்கள் சந்திப்பு (பெண் பார்த்தல்) இணையம் மூலம் ஏற்பாடு செய்து தரப்படும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கப்பல் தீப்பிடித்த சம்பவத்தை இரண்டாம் நிலையாக்கிய நடிகை

இலங்கையின் சுற்றுச் சூழல் பாதிப்பை இரண்டாம் இடத்திற்கு கொண்டு சென்ற சிங்கள நடிகை தொடர்பில் பிரபல சர்வதேச சஞ்சிகையான எக்கெனோமிஸ்ற் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரத்தில் இலங்கையில் அதிகமாக பேசப்பட்ட தலைப்பாக நடிகை பியுமி ஹன்சமாலி காணப்பட்டார்.


எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடலில் மூழ்கிய தினம் 28 வயதான நடிகை பியுமி ஹன்சமாலி, அழகு கலை நிபுணர் உட்பட 13 பேர் பிறந்த நாள் விருந்து ஒன்றில் கலந்து கொண்டமையால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தசம்பவத்தையடுத்து கூகிள் தேடு பொறி உட்பட சமூக வலைத்தளங்களில் அதிகமாக தேடப்பட்ட ஒருவராக நடிகை பியுமிஹன்சமாலி காணப்பட்டுள்ளார் என அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டு வாரத்துக்கு மேலாக கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கையின் கடற்பகுதியில் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் இலங்கையர்கள் உட்பட அமைப்புகள் பலவற்றின் கருத்துகளை பியுமி ஹன்சமாலியின் கைது மூடி மறைத்துள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கப்பல் அனர்த்தம் காரணமாக கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீள குறைந்து 40 வருடங்கள் செல்லும் என ஏற்கனவே எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு 4 கோடி டொலரை கூடுதலாக உதவுகிறது உலக வங்கி




இலங்கையின் 7 மாவட்டங்களில் நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சுகாதார சேவைகளை விரிவுபடுத்துவதற்காக இலங்கைக்கு 4 கோடி டொலர் கூடுதல் நிதியுதவி அளிக்க உலக வங்கியின் நிர்வாக இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்தது.

இந்த திட்டம் மேல், தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் நாட்டின் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதியில் செயற்படுத்தப்படவுள்ளது.

இலங்கையின் கிராமப்புற, மற்றும் பெருந்தோட்டப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் பாதுகாப்பான குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத்தை வழங்குவதற்காக 1998 முதல் உலக வங்கி நிதியளித்து வருகிறது. அதன் அடிப்படையில் இது மூன்றாவது நீர்த்துறை திட்டமாகும். இந்தத் திட்டம் அடுத்த நான்கு ஆண்டுகளில் 47 லட்சம் மக்களை உள்ளடக்கும் வகையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம், புதிய நீர் வழங்கல் அமைப்புகள், தற்போதுள்ள நீர் வழங்கல் அமைப்புகளின் சீர்திருத்தம், வீடுகள் மற்றும் பாடசாலைகளுக்கு நீர் வழங்கல் என்பன அடங்குகின்றன.

கொவிட்-19 தொற்று நோயை இலங்கை எதிர்த்துப் போராடுவதால், ஆரோக்கியமான தேசத்தை உறுதிப்படுத்த பாதுகாப்பான நீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைப்புகளை உருவாக்குவது மிக முக்கிய மானது 'என்று மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கி நாட்டின் இயக்குநர் ஃபரிஸ் ஹதாத்-செர்வோஸ் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டம் ஏற்கனவே பதுளை, நுவரெலியா, கேகாலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, இரத்னபுரி மற்றும் மொனராகலை ஆகிய இடங்களில் சுமார் 3 லட்சத்து 10 ஆயிரம் மக்களுக்கு நன்மையளித்துள்ளது.



## மலையகத்தில் கொவிட் தடுப்பூசி பெற முதியவர்கள் கடும் ஆர்வம் காட்டல்

மலையகத்திலும் கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நான்காவது நாளாக, நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கொட்டகலை மற்றும் ஹற்றன் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இவர்கள் அனைவரும், காலையிலேயே தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்குச் சென்று, ஆர்வத்துடன் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர்.

## கொழும்பு துறைமுக நகர பாதுகாப்பு அச்சுறுத்தல்

போர்ட் சிட்டி என்ற கொழும்பு துறைமுக நகரத்துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து அக்கறை செலுத்தப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம் (ஐ.என்.எஸ்.எஸ்.) நடத்திய மெய்நிகர் மூடிய கதவு சுற்று அட்டவணை விவாதத்தில் இந்த விடயம் பேசப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட தேசிய பாதுகாப்பு தொடர்பாக முதன்மையான சிந்தனைக் குழுவான தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம், 'நகர்ப்புற பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு துறைமுக நகரம்' குறித்த ஒரு விவாதத்தை நிபுணர்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்திருந்தது.

கலந்துரையாடலில் பேச்சாளர்கள், இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பொதுப் பணியாளர்கள், பாதுகாப்புப் படை முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.

இந்த நிலையத்தில் துறைமுக நகரம் ஒரு பொருளாதார மையமாகவும், இந்திய கடலில் ஒரு கடல் மையமாகவும் வளர்ந்து வரும் போது, அதன் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முன்னுரிமை அவசியம் என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஒரு லட்சத்து 37 ஆயிரம் பேருக்கு நேற்று மட்டும் தடுப்பூசி வழங்கல்!

இலங்கையில் நேற்றைய தினம் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 67 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நாட்டில் இதுவரை 22 லட்சத்து 59 ஆயிரத்து 385 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.



குறிப்பாக 59 ஆயிரத்து 881 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 12 லட்சத்து 69 ஆயிரத்து 157 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம், நேற்று சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 76 ஆயிரத்து 615 பேருக்கு செலுத்தப்பட்டது.

இதேவேளை, நேற்றைய தினம் 181 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரை 3 லட்சத்து 55 ஆயிரத்து 358 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 64 ஆயிரத்து 986 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஸ்புட்னிக் வியின் 2 ஆவது டோஸ் இன்று முதல் செலுத்தப்படுகிறது




ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸை செலுத்தும் நடவடிக்கைகள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, கொத்தட்டுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கோல்புறுக் மற்றும் எல்பெத்த கிராம சேவகர் பிரிவுகளில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசிசெலுத்தும்நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டன.

கோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயத்தில் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன எனப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிவக்கொழுந்து புஷ்பகாந்தன் தெரிவித்தார்.

மேலும் வட்டவளை கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையும் இன்று ஆரம்பிக்கப்பட்டதாக வட்டவளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.காமதேவன் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2021 இல் வெளியிடப்பெற்றது.